செ.வெ.எண்-26 நாள்-11.03.2019

**பாராளுமன்ற தேர்தல் பத்திக்கை மற்றும் தொலைக்காட்சிகளில் வெளிவரும் அரசியல் கட்சிகளின் தேர்தல் விளம்பரங்களை கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையினை தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப., அவர்கள் பார்வையிட்டார்.**

அரியலூர் மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2019 தேதி அறிவித்து 10.03.2019 முதல் தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் அமலுக்கு வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **திரு.வீ.ஆர்.சீனிவாசன்** அவர்களுடன் செய்தி மக்கள் தொடர்புத்துறை மூலம் செயல்பட்டு வரும் ஊடக மையம் மற்றும் ஊடக சான்றிதழ் வழங்கும் குழு அறையில் தேர்தல் குறித்த விளம்பரங்களை கண்காணிக்கப்பட்டு வரும் பணிகள் நடைபெற்றுவருவதை இன்று (11.03.2019) பார்வையிட்டனர்.

**இதில், தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

பாராளுமன்ற தேர்தல் தொடர்பாக ஊடகங்களில் வெளியாகும் விளம்பரங்களை கண்காணிக்க கட்டுப்பாட்டு அறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் விளம்பரங்களை 24 மணிநேரமும் கண்காணித்து, வருவார்கள். உள்ளூர் தொலைக்காட்சியில் வரும் அரசியல் விளம்பரம் ஒளிப்பரப்புவதற்கு இக்குழுவினரிடம் அனுமதி பெற வேண்டும். பத்திக்கைகளில் வெளிவரும் விளம்பரம் கட்டணம் செலுத்தும் செய்திகள் வெளியிடப்படுவதை கண்காணித்து அதற்கான செலவினக் கணக்குகளை இக்குழுவினர் தாக்கல் செய்வார்கள். மேலும், அனைத்து விதமான அரசியல் தொடர்பான விளம்பரங்களையும் கண்காணிப்பார்கள். அரசியல் கட்சிகளின் ஊடக விளம்பரங்கள் கணக்கீட்டு தொகை அந்தந்த அரசியல் கட்சிகளின் வேட்பாளர் கணக்கில் சேர்க்கப்படும்.

செய்தித்தாள்கள்களுக்கான நடத்தை விதிகள் - மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951 பிரிவு 121(அ)ன் படி அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் இ-பதிப்பு செய்தித்தாள்களில் கொடுக்கப்படும் விளம்பரங்களுக்கு ஊடக மையம் மற்றும் ஊடக சான்றிதழ் வழங்கும் குழு (MCMC) -யிடம் முன்சான்றிதழ் பெறப்படவேண்டும். தேர்தல் நாள் மற்றும் தேர்தலுக்கு முந்தைய நாள் செய்தித்தாளில் வெளியிடப்படும் அரசியல் விளம்பரங்களுக்கு ஊடக மையம் மற்றும் ஊடக சான்றிதழ் வழங்கும் குழு (MCMC)-யிடம் முன்சான்றிதழ் பெறப்படவேண்டும். தவறும் பட்சத்தில் தேர்தல் நடத்தின் விதிமுறைகள் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த ஊடக மையம் மற்றும் ஊடக சான்றிதழ் வழங்கும் குழு (MCMC) மையமானது சுழற்சி முறையில் அலுவலர்கள் பணியில் 24x7 நேரமும் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பொற்கொடி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.இரா.ஜெயஅருள்பதி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.